MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Puthupunal Vizha in Sangam Literature

Dr. Vanathy Pahirathan

Senior Lecturer, Department of Tamil, SVIAS, Eastern University, Sri Lanka

Manuscript ID : **MT46A0098**
Volume : **2**
Issue : **4**
Month : **December**
Year : **2022**
Received: 18.11.2022
Revised: 28.11.2022
Accepted: 07.12.2022
Published: 16.12.2022
Pages : 281-290
DOI: 10.5281/zenodo.7446855

ABSTRACT:

In Sangam literature, the phrase "vilavu" denotes the word vizhakkal. The word vilavu exemplifies vizha or festival. These vizhakkal were ritualistic and recreational. These vizhakkal were entertaining and everyone from the community such as kings, men, women, elders, and children participated.

Though the Sangam literature mentions about various vizhakkal they were stated through short phrases and metaphors. The arrival of puthuppunal is celebrated as a grand festival. The information related to puthuppunal was elaborately described. In addition, it was celebrated as a resource ritual and community-based festival.

When was puthuppunal celebrated, how was it celebrated, where was it celebrated, who were the participants, and what were the events included in the festival are the main research problems of this study.

The research problems are described through the primary data obtained from the Sangam literature using historical and sociological approaches and how puthuppunal is descriptive and differs from the other festivals mentioned in the Sangam literature.

KEYWORDS:

Vilavu, Valachsadangu, Puthuppunal, Water Sports, Thaluvu, Thunamkai

சங்க இலக்கியங்களில் புதுப்புனல்விழா

கலாநிதி வானதி பகீரதன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

கட்டுரைச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் விழாக்களை 'விழவு' என்ற சொற்தொடராலே சுட்டுகின்றன. விழவு என்பதற்கு விழா அல்லது பண்டிகை எனப் பொருள் கூற முடியும். இவ்விழாக்கள் சடங்கு சார் விழாக்களாகவும் மகிழ்வளிப்பு விழாக்களாகவும் அமைந்திருந்தன. விழாக்கள் மகிழ்ச்சியைக் கொடுப்பனவாகவும் சமூகத்தினர் அனைவரும் பங்கு கொள்ளும் தன்மை வாய்ந்தனவாகவும் அமைந்ததோடு அரசர் முதல் ஆடவர், மகளிர், முதியோர், சிறுவர் என அனைவரும் பங்குகொள்வனவாகவும் அமைந்திருந்தன.

சங்க இலக்கியங்கள் பல்வேறு விழாக்கள் பற்றிய தகவல்களைக் குறிப்பிட்டாலும் அவை சிறுதொடர்களாகவோ உவமைகளாகவோ அமைந்திருந்தன. புதுப்புனல் வரவே பெரும் விழாவாகக் கொண்டாடப்படுவதை அறிய முடிகின்றது. புதுப்புனல் விழாச் செய்திகள் பெரும் விபரிப்புக்களாக அமைந்துள்ளதோடு அது ஒரு வளச்சடங்காகவும் சமூகம் சார்ந்த விழாவாகவும் கொண்டாடப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

அந்தவகையில் புதுப்புனல் விழா எப்போது கொண்டாடப்பட்டது? அவ்விழா எவ்வாறு கொண்டாடப்பட்டது? அது எங்கே நடைபெற்றது? அவ்விழாவில் பங்கு பற்றியோர் யாவர்? அதில் எத்தகைய நிகழ்வுகள் இடம்பெற்றன? முதலான பிரச்சினைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

இவ்வாய்வு சங்க இலக்கியங்களை முதன்நிலைத் தரவாகக் கொண்டு வரலாற்றியல் மற்றும் சமூகவியல் அணுகுமுறைகளைப் பின்பற்றி ஆய்வுப்பிரச்சினைகளை விபரிப்பதோடு புதுப்புனல்விழா சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் ஏனைய விழாக்களிலிருந்து வேறுபட்டதாகவும் விபரணமாகவும் அமைந்துள்ளது என்பது முன்னிறுத்தப்படுகின்றது.

கருச்சொற்கள்

விழவு, வளச்சடங்கு, புதுப்புனல், நீர்விளையாட்டு, தழூஉ, துணங்கை

முன்னுரை

சங்க இலக்கியங்கள் விழாக்களை ‘விழவு’ என்ற சொற்றொடராலே சுட்டுகின்றன. விழவு என்பதற்கு விழா அல்லது பண்டிகை எனப் பொருள் கூற முடியும். இவ்விழாக்கள் சடங்கு சார் விழாக்களாகவும் மகிழ்வளிப்பு விழாக்களாகவும் அமைந்திருந்தன. விழாக்கள் மகிழ்ச்சியைக் கொடுப்பனவாகவும் சமூகத்தினர் அனைவரும் பங்கு கொள்ளும் தன்மை வாய்ந்தனவாகவும் அமைந்ததோடு அரசர் முதல் ஆடவர், மகளிர், முதியோர், சிறுவர் என அனைவரும் பங்குகொள்வனவாகவும் அமைந்திருந்தன.

சங்க காலத்தில் விழாக்கள் குறிப்பிட்ட விசேட நாட்களில் நடத்தப்பட்டதுடன் விழாவுக்கான களம் தயார் படுத்தப்பட்டு அலங்கரிக்கப் பட்டிருந்தன என்பதையும் இவ்விழாக்கள் மன்றுகளிலோ நீர்த்துறையிலோ மணற் பரப்பிலோ நடத்தப்பட்டன என்பதையும் இவ்விழாக்களில் ஆடல், பாடல், வாத்திய இசை என்பன முக்கிய மகிழ்வளிப்பு அம்சங்களாயிருந்தன என்பதையும் இவ்விழாக்கள் மிகவும் ஆரவாரமுடையதாய் இருந்ததோடு அவை பல்வேறு ஊர்களிலும் நடத்தப்பட்டன என்பதையும் சங்க இலக்கியங்கள் தெளிவு படுத்துகின்றன.

சங்க இலக்கியங்களில் இவ்விழாக்கள் பற்றிய செய்திகள் உவமைகளாகவோ சிறு சிறு தொடர்கள் மூலமோ எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவை விழாக்கள் பற்றிய விபரிப்புகளாக அமையவில்லை. அகநானூற்றில் 113, 115, 116, 122, 141, 149, 185, 176, 187, 189, 222, 266, 296, 326, 320, 352, 368, 376, 385 போன்றவற்றிலும் குறுந்தொகை 31, 125, 295, 326 உம், நற்றிணை 19, 44, 90, 138, 170 உம், மதுரைக்காஞ்சி 327, 460, 620 உம், பெரும்பாணாற்றுப்படை 410, பதிற்றுப்பத்து 15, கலித்தொகை, பாலைக்கலி 4, 26, 28, 34, குறிஞ்சிக்கலி 4, மருதக்கலி 28, 33, முல்லைக்கலி 5 போன்றவற்றிலும் இவ்விழாக்கள் பற்றிய செய்திகள் வந்துள்ளன. இவ்விழாக்களை இறை வழிபாடு நம்பிக்கையின் அடியாகப் பிறந்த சடங்குசார் விழாக்கள் எனவும் மகிழ்வளிப்பு விழாக்கள் எனவும் வகைப்படுத்திக் கூற முடியும்.

சங்க இலக்கியங்களில் தலைவனின், மன்னனின் ஊர் பற்றிக் கூறும் போது “ஆடு இயல் விழவின் அழுங்கல் மூதூர்” (நற்றிணை 90), “விழவுக்கலம் கமழும் உரவு நீர் சேர்ப்ப” (நற்றிணை 19), “கோடியர் விழவு கொள் மூதூர்” (அகநானூறு 352), “அழியா விழவின் அஞ்சுவரும் மூதூர்” (அகநானூறு 115), “அழுங்கல் மூதூர் விழவின்றாயின் துஞ்சாதாகும்” (அகநானூறு 122), “விழவுடை விழுச்சி வேங்கடம்” (அகநானூறு 61), “விழவறுபறியா முழவமிழ் மூதூர்” (பதிற்றுப்பத்து 15), “பொய்யா விழவின் கூடற் பறந்தலை” (அகநானூறு 116) என ஊரின் பெயருடன் விழவைக் குறிப்பிட்டுக் கூறுகின்றன. ஊரின் சிறப்புத் தன்மையையும் பெருமையையும் கூறுவதற்கு அவ்வூரில்

நடைபெறும் விழாக்கள் முக்கிய காரணமாக இருந்துள்ளது போல் தெரிகின்றது. வெற்றிச் சிறப்புடைய, செல்வச் செழிப்புடைய வளம் பொருந்திய ஊர்களிலேயே விழாக்கள் சிறப்பாக நடைபெறுவதோடு கலைகளை ஊக்குவிக்கவும் கலைஞர்களுக்கு கொடை வழங்கவும் முடியும். இதனாலேயே அவ்வூர்கள் விழவுடைய ஊர்களாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

தலைவி தனது அழகையும் இளமையையும் சிறப்பையும் கூறும் போது "விழவு மேம்பட்ட என் நலனே" (குறுந்தொகை 295) எனக் கூறுவது விழவின் செழுமை, சிறப்பு, அழகு என்பவற்றை உணர்த்துகின்றது.

விழவுக்குச் செல்லும் மக்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டு சென்றமையை நற்றிணை 170, குறுந்தொகை 386, அகநானூறு 176, 326 உம் பரிபாடலில் வைகையைப் பற்றிய பாடலிலும் காண முடிகின்றது. மகளிர் விழவுக்குச் செல்லும் போது மயிர்ச்சாந்து பூசிக் கூந்தலை அழகாக முடிந்து பிணைத்துக் கட்டிய அழகிய தழைகளால் ஆன உடையினை இடுப்பிலே தரித்துச் சென்றமை பற்றி நற்றிணை 170ஆம் பாடல் கூறுகிறது. விழவுக்குச் செல்லும் பெண்ணின் அலங்காரத்தால் விழா நடக்கும் களம் அழகும் பொலிவும் பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

"மடக்கண் தகரக் கூந்தல் பணைத்தோள்
வார்ந்த வால் எயிற்றுச் சேர்ந்து செறி குறங்கின்
பிணையல் அம் தழை தைஇத் துணையில்ல
விழவுக்களம் பொலிய வந்து நின்றனளே...." (நற்றிணை 170)

ஆம்பல் மலர்களுடன் வீட்டின் பக்கத்தே படர்ந்திருக்கும் கொழுத்த வயலைக் கொடிகளைப் பிணைத்துக் கட்டிய தழையுடையினை உடுத்து விழவிலே மகளிர் ஆடுகின்றமை பற்றி அகநானூறு 176 கூறுகின்றது.

"மனை நகு வயலை மரன் இவர் கொழுங்கொடி
அரிமலர் ஆம்பலொடு ஆர்தழை தைஇ
விழவு ஆடு மகளிரொடு தழூஉ அணிப் பொலிந்து..." (அகநானூறு 176)

"இருங் கதிர்க் கழனிப் பெருங்கவின் அன்ன
நலம் பாராட்டி நடையெழில் பொலிந்து
விழவிற் செல்இயர் வேண்டும்..." (அகநானூறு 326)

"வால் இழை மகளிர் விழவு அணிக்கூட்டும்
மாலையோ அறிவேன் மன்னே" (குறுந்தொகை 386)

விழவுகளில் தழூஉ, துணங்கை முதலான ஆட்டங்கள் இடம்பெற்றதோடு தொழில் முறைக் கலைஞர்களான கோடியர், வயிரியர் முதலானோரின் ஆடல்களும் வாத்திய இசையும் இடம்பெற்றுள்ளமையை “விழவின் ஆடும் வயிரியர்” (மதுரைக்காஞ்சி 623), “கோடியர் விழவு கொள் மூதூர்” (அகநானூறு 356), “இன்சீர் தூங்கும் அழுங்கல் மூதூர்” (நற்றிணை 138) என்ற தொடர்கள் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறு ஆடலும் பாடலுமாக நடைபெற்ற விழாக்களில் புதுப்புனல் விழா மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு சமூக விழாவாகவும் சடங்குசார் விழாவாகவும் நடத்தப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

கா. சிவத்தம்பி அவர்கள் புனல் விழா பற்றிக் கூறும் போது:

“நீர் விழவு போன்ற விழாக்கள் ஆற்று வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். புற.நா.39ல் குறிப்பிடப்பட்டுள்ள முந்நீர் விழவினை பெயரறியாத உரையாசிரியர் கடல் தெய்வத்தை திருப்திப்திப்படுத்தும் விழாவாகச் செய்யப்பட்டது என்பர்.” சிவத்தம்பி.கா, (2005), பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் முந்நீர் விழவு, புது நீர்விழவு, புனலாடல், புதுநீராடல், புதுப்புனலாடல் போன்ற நீருடன் தொடர்புடைய நிகழ்வுகள் குறிப்பிடப் பட்டிருப்பதைக் காணலாம். முந்நீர் விழவு என்பதில் வரும் “முந்நீர்” என்பது கடலைக் குறிக்கின்றது எனலாம். “நளிஇரு முந்நீர் ஏணியாக” (புறநானூறு 35), “முந்நீர் பயந்த வெண்கல் அமிழ்தம்” (அகநானூறு 207), “நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி” (புறுநானூறு 66), “கரையோருமுந்நீர்த்திமில்” (புறுநானூறு 303), “முந்நீர் வண்ணன் பிறங்கடை” (பெரும்பாணாற்றுப்படை 30) போன்றவற்றில் ‘முந்நீர்’ என்பது கடலைக் குறிப்பதைக் காணலாம்.

பருகக் கூடிய உவர்த்தன்மை அற்ற நீரையும் முந்நீர் என வழங்கும் வழக்கம் சங்கப் பாடலில் காணப் படுகின்றது. அதாவது நீர் நிறைந்த பெரிய குளங்கள் ஆறுகள் போன்றவற்றையும் குறிப்பிடலாம். “முந்நீர் உண்டு முந்நீர் பாய்ந்து” (புறநானூறு 24), “இருமுந்நீர்க் குட்டம்” (புறநானூறு 20) ஆகியவற்றை ஆறு, குளங்களிலுள்ள நீரைக் குறிக்கின்றன. முந்நீர் என்பதற்கு ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் ஆகிய மூன்றும் சேரும் நீர் முந்நீர் எனவும் இவை கடலில் சேர்வதால் கடலை முந்நீர் எனவும் குறிப்பிடுகின்றனர்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற மன்னன் இம்முந்நீர் விழாவைக் கொண்டாடியமை புறநானூற்றில் இருந்து அறிய முடிகின்றது.

“எங்கோ வாழிய குடுமித்தங்கோச்
செந்நீர் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர் பஃறுனி மணலிலும் பலவே.” **(புறநானூறு 9)**

இப்பாண்டியன் தன் முன்னோர்கள் கடல் தெய்வத்திற்கு செய்த முந்நீர் விழாவை கொண்டாடினான் என்பதும் அவ்விழாவில் வயிரியருக்கு பசும்பொன் கொடுத்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆட்டனத்தி என்பவன் நீர் விழாவில் நீராடும் போது அவனைக் காவிரி ஆறு கொண்டு சென்றது பற்றி அகநானூறு 222 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

“முழவு முகம் புலராக்கவி கொள் ஆங்கண்
கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்
ஈட்டலில் பொலிந்த ஏந்து குவவு மொய்ம்பின்
ஆட்டன் அத்தி நலன் நயந்து உரைஇத்
தாழிரும்கதும்பின் காவிரி வல்வின்....” **(அகநானூறு 22)**

இப்பாடலில் இந்நீர் விழா கழாஅர் பெருந்துறை ஆகிய காவிரியில் நடைபெற்றது என்பதையும் இவ்விழாவில் முழவுகளின் முழக்கம் ஓயாது காணப்பட்டது என்பதும் தெளிவாகின்றது. இதே செய்தியை அகநானூறு 376 ஆம் கூறுகின்றது.

“ஒலி கதிர்க் கழனிக் கழாஅர் முன் துறைக்
கலி கொள் சுற்றமொடு கரிகால் காணத்
தண்பதம் கொண்டு தவிர்த்த இன்னிசை
ஒண்பொறி புனை கழல் சேவடி புரளக்
கருங்கச்சு யாத்த காண்பின் அவ் வயிற்று
இரும் பொலப் பாண்டில் மணியொடு தெரிப்பப்
புனல் நயந்து ஆடும் அத்தி..” **(அகநானூறு 376)**

இப்பாடல் மூலம் கழாஅர்த் துறையில் நடந்த புனல் விழாவை கரிகால் சோழன் தன் சுற்றத்துடன் கண்டிருந்தான் என்பதும் அதில் அந்திப்புனல் விழாவிற்காக ஆடை அணிகலன்களை அதாவது வீரக்கழலும் கருங்கச்சும் அணிந்திருந்தான். பாண்டிலும் மணியும் ஒலி செய்ய அவன் புனல் நயந்து ஆடினான் என்பதை அறியலாம்.

பரிபாடலில் வருகின்ற வையை பற்றிய பாடல்களில் புனலாடல் ஒரு விழாவாகவே மேற்கொள்ளப்பட்டது என்பது தெளிவாகின்றது. பரிபாடலில் வையைப் புனல் பற்றி 6, 7, 10, 11, 12, 16, 20, 22 முதலிய எட்டுப் பாடல்களிற் குறிப்பிடப்பட்டுள்ளன. வையைப் பாடலின் அமைப்பினை நோக்கினால் இதில் வரும் வையை பற்றிய எட்டுப்

பாடல்களும் பொருளமைப்பில் ஒரே மாதிரியான அமைப்பிலேயே அமைந்துள்ளது. முதலில் மேகந்திரண்டு மலைகளில் மழையைப் பொழிய அம்மழைநீர் வழிந்து வெள்ளம் பெருக் கெடுத்தல். சோலை, பொழில்களில் உள்ள நறுமணம் மிக்க பூக்களை வையை வெள்ளம் அடித்துக் கொண்டுவந்து சேர்த்து வையையை அழகு பெறச் செய்தல், வையையின் வரவையும் அதன் பொருக்கையும் பறையறைந்து அறிவித்தலும் உடைப்பினை அடைக்க மக்கள் ஆரவாரித்து செல்லுதலும் குறிப்பிடப்படுகின்றது.

மக்கள் புதுப்புனல் வரவை கொண்டாட அதில், நீராடி மகிழ அதனை வாழ்த்திப் போற்றுவதும் நீர் வரவை விழவு போல் கொண்டாடப் புறப்படுதலும், மக்கள் நீராடச் செல்லும் போது பல்வகை ஆபரணங்களையும், மலர்களையும், மாலைகளையும் சூடிச் செல்லுதலும் நீராடலுக்கும், நீர் விளையாட்டுக்குமான பொருட்களை எடுத்துச் செல்லுதலும் குறிப்பிடப்படுவதோடு அவர்கள் வையையைக்கு வழிபாடியற்ற தேவையான பொருட்களைக் கொண்டு செல்வதும் நீராடி மகிழ்தலும், நீராடுதலின் போது காதலர் சேருதலும், கூடுதலும், ஊடுதலும் பரத்தையரைப் பழித்தலும், தலைவிக்கும் பரத்தையுக்குமான சண்டை, காதற்பரத்தைக்கும் சேரிப் பரத்தைக்குமான சண்டை, நீராடியதால் வையை சேறுபடலும் இரவானதும் மதுரைக்கு மீண்டு செல்லுதலும் என்ற ஒரு அமைப்பிலேயே வையை பற்றிய பாடல்கள் அமைந்துள்ளமையைக் காணலாம்.

புதுவெள்ளத்தின் வரவினைப் பரிபாடல் குறிப்பிடும் போது “கடல் நீரை முகத்த மேகங்கள் வானில் எல்லா இடமும் பரவி மழையாகப் பொழிய மலையிலுள்ள உயிரினங்கள் களிப்படைந்தன. மலைப் பகுதியிலுள்ள தூசுகள் நீங்கின. அருவிகள் வீழ்ந்த இவ்அருவி நீர் மலையடிவாரத்தை அடைந்து எங்கும் பரவிச் சென்றது. புனல் பரவியதால் உழவர்கள் தம் தொழிலை மேற்கொள்வாராயினர்.

> **“வானம் நில மறைவது போல் மயிர் புனல்**
> **தலைத் தலைஇ…”** **(பரிபாடல் 6)**

சையமலையில் பெய்த மழையினால் வெள்ளம் பெருகி வருகின்றது. ஆறு காற்றினால் உதிர்ந்த மலர்களைப்பரப்பியும் மரங்களை அடித்துக் கொண்டும் பெரிய கடல் பொங்கி வருவதைப்போல வருவதாக வையையின் வரவு குறிப்பிடப்படுகிறது. வையை ஆற்றில் நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூக்களைச் சுமந்து வருவதால் மணப்பொருள் கலக்கப்பட்டதைப் போன்ற மணத்துடன் வருகின்றது. ஆடலறியா அரிவை போலவும் ஊடலறியா உவகையள் போலவும் வருவதாகக் குறிப்பிடுவதோடு அதில் நீராடுவோர் பலவித நறுமணப்பொருட்களை உடலில் பூசி நீராடுவதால் புது மணத்தோடு வருவதாக வர்ணிக்கப்படுகின்றது.

"வேண்டு வழி நடந்து தாங்கு தடை பொருது
விதி ஆற்றான் ஆக்கிய மெய்க்கலவை
பொது நாற்றம் உள் கரந்து புது நாற்றம்
செய்கின்றே செம் பூம்புனல்...." (பரிபாடல் 7:19-22)

வையையின் கரையான திருமருத முன்துறையிலே நீராடுவதற்காக மக்கள் அணியணியாகத்திரண்டு செல்லும் காட்சி எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இது புனலாடல் ஒரு விழாவாகவே மேற்கொள்ளப்பட்டது என்பது தெளிவுபடுத்துகின்றது. வையையின் வரவினை அறிந்த மக்கள் அப் புதுப் புனலில் நீராடுவதற்காக பல்வேறு பொருட்களையும் பூசைப் பொருட்களையும் ஏந்திச் செல்வதாக பரிபாடல் ஆறாம் பாடலில் குறிப்பிடப்படுகின்றது. புனலாடச் செல்வதற்காக தம்மை அலங்கரித்துக் கொண்டு சென்றதாகவும் குதிரை, தேர், மாட்டு வண்டி, யானை, பல்லக்கு முதலானவற்றில் சென்றமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

"புகை பூ அவி ஆராதனை அழல் பல ஏந்தி
நகை அமர் காதலரை நாளணிக் கூட்டும்
வகை சாலும் வையை வரவு" (பரியாடல் 6)

இவ்வையைப் புனலில் நீராடச் செல்வோர் பல்வேறு அணிகலன்களையும் அணிந்து சென்றனர். தோள் வளை அணிந்தும் தொய்யில் எழுதியும் ஆரங்கள் அணிந்தும் முத்துச் சரங்கள் அணிந்தும் செம்பஞ்சுக் குழம்பும் சந்தனம் முதலானவற்றைப் பூசியும் தம்மை ஒப்பனை செய்து வந்தமை குறிப்பிடப்படுகின்றது.

"தொடிதோள் செறிப்பத் தோள் வளை இயங்கக்
கொடிசே ராத்திருக் கோவை காழ் கொளத்
தொகு கதிர் முத்துத் தொடை கலிழ்பு மழுக
உகிரும் கொடிரும் உண்ட செம்பஞ்சியும்..." (பரியாடல் 6:15-19)

வையைப்புனல் விழாவில் பங்கு கொள்வதற்காக மக்கள் பேரணியாகச் சென்றமை பற்றிக் கூறப்படுகின்றது. இளைஞரும் மகளிரும் அணியணியாகச் சென்றதுடன் யானைகளும் குதிரைகளும் போருக்குச் செல்வது போலேச் சென்றனர். மக்கள் நீர் விளையாட்டுக்கான கருவிகள் பலவற்றையும் கொண்டு சென்றனர்.

"போரணி அணியின் புகர் முகம் சிறந்ததென
நீரணி அணியின் நிரை நிரை பிடி செல
ஏறணி அணியின் இளையரும் இனியரும்
ஈரணி அணியும் இகல் மிக நவின்று
தணி புனல் ஆடும்..." (பரிபாடல் 6)

வையைத் தண் புனல் விழாவில் பல்வேறு இசைக் கருவிகளும் இசைக்கப்பட்டது. அவற்றின் தாள ஒலிகளுக்கேற்ப ஆடல் மகளிர் நடனமாடியமை கூறப்படுகின்றது.

"புரிநரம்பின் கொளைப்புகழ் பாலை யேழும்
எழுப்புனர் யாழும் இசையும் கூடக்
குழவளத்து நிற்ப முழவெழுந்தாற்ப
மன்மகளிர் சென்னியர் ஆடல் தொடங்க.." (பரிபாடல் 7)

வையையும் கொடையும் வளவும் ஓயாதிருக்குமாக என மக்கள் வையையைப் போற்றித் துதிப்பதன் மூலம் இது ஒரு வளச் சடங்கு என்பது தெளிவாகின்றது.

"பூவீழ் அரியிற் புலம்பப் போகாது
யாம்வீழ்வார் ஏமம் எய்துக என்மாரும்
கிழவர் கிழவியர் என்னது ஏழ்காணும்
மழவீன்று மல்லல் கேள் மன்னுக என்மாரும்.." (பரிபாடல் 11)

இவ்வாறாக வையை பெரும் ஆரவாரங்களுடன் எடுக்கப்பட்ட விழாவானது "விசும்புக் கடி விட்டென்று விழவுப் புனலாங்க" (பரிபாடல் 11) என்று சொல்லும் படியாக மிகவும் சிறப்பாக சங்ககால மக்களால் மேற்கொள்ளப்பட்டது. இப்புனல் விழா சடங்குசார் அம்சங்களாக அமைந்த அதே நேரம் காதலர்களை ஒன்று கூட்டும் காமர் விழா என்னும் படியாக மகிழ்வோடு நடைபெற்றது. "காமர் பெருக்கன்றோ வையை வரவு" (பரியாடல் 6, 7)

"காதலன் காமம் ஒருக்கவொரு தன்மை நிற்குமோ
ஒல்லைச் சுருக்கமும் ஆக்கமும் சூளுறல் வையைப்
பெருக்கன்றோ.." (பரிபாடல் 6)

பரிபாடலில் புனலாடலின் போது விளையாடப்படும் பல்வேறு நீர்விளையாட்டுக்கள் பற்றிய தகவல்களை அறியமுடிகின்றது. வாழைத்தண்டுகளை நீரிலிட்டு தண்டுக்குத் தண்டு தாவி விளையாடுதல், தாழைப் புந்தாதுகளை நுரைகளின் மேல் தூவி விளையாடுதல், படகுகளில் அமர்ந்து ஆற்று நீரோட்டத்திற்கேற்ப அதைச் செலுத்தி விளையாடுதல், பாவைப் பெண்கள் கரையில் இழைத்து விளையாடிய சிறுவீடுகளில் சிறு கறி சோறு கூத்து விளையாடுதல், சிறு சோறு கிடைக்காது ஏமாற்றம் பெற்ற இளைஞர் பெண்களின் பந்தையும் கழங்கையும் பல பெரு களவாடி ஓடுதல், கரையில் நின்று ஆற்றுள் குதித்து விளையாடுதல், சாயநீரைப்பீச்சுதல், வண்ணநீர் வட்டுக்களை எறிதல், புனலிலே கள்ளை ஊற்றி விளையாடுதல்,

பீச்சங்குழாயினால் நீரை பீச்சி விளையாடுதல் முதலிய விளையாட்டுக்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

போர்க்களத்திற்குக் கருவிகள் கொண்டு செல்வது போல பல விளையாட்டுக்கருவிகளையும் மக்கள் கொண்டு சென்றனர். நெய் பூசப்பட்டவிசிறி, வண்ணத்திரவம் நிரப்பப்பட்ட அரக்கு நிறமுடைய நீரெக்கி, வாசனைநீர் அடைக்கப்பட்ட கொம்பு, மூங்கில் குழாய், நிற வட்டுக்கள் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

“நெய்மாண் விசிறியர் நீர்மணக் கோட்டினர்...” (பரிபாடல் 6:25)

“நெய்த்தேர் நிற அரக்கின் நீரெக்கி...” (பரிபாடல் 10:12)

“வண்ணநீர் கரந்த வட்ட வட்டெறிவோரும்..” (பரிபாடல்: 11)

இரவானது தோன்றியதும் மக்கள் நீராடுதலை விடுத்து மதுரைக்கு மீண்டு செல்லத் தொடங்கினர். புதுநீராடலுக்காக அணிந்த நாளணிகளை அகற்றி மாலையில் பூக்கும் பூக்களைச் சூடித் தோள்வளை, முத்துமாலை முதலிய ஒளிவீசும் அணிகளை அணிந்து கெண்டு மதுரைக்குச் செல்வதாக பரிபாடல் குறிப்பிடுகின்றது.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் புதுப்புனல் விழா பற்றிய செய்திகளினூடாக சங்க காலத்து மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளையும் பண்பாட்டு அம்சங்களையும் வணக்க வழிபாடுகளையும் அறிந்து கொள்வதோடு இப்புனல் விழாக்கள் நடைபெற்ற இடங்களையும் அதில் பங்குகொண்டோர் பற்றிய தகவல்களையும் புனல் விளையாட்டில் ஈடுபட்ட மன்னர்கள் பற்றிய செய்திகளையும் அறிவதோடு இவ்விழாவில் பங்குபற்றியோர் எத்தகைய நீர் விளையாட்டுக்களில் ஈடுபட்டார்கள் என்பதையும் அறியமுடிகின்றது.

துணைநூற்பட்டியல்

1. புலியூர்க்கேசிகன், (2002), பரிபாடல் தெளிவுரை, பாரிநிலையம், சென்னை.
2. அம்மன்கிளி முருகதாஸ், சங்க கவிதையாக்கம் மரபும் மாற்றமும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. கைலாசபதி.க (2006), தமிழ் வீரநிலைக் கவிதை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4. பத்மநாதன் (பதிப்பாசிரியர்), 2007, சங்க இலக்கியமும் சமூகமும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
5. மௌனகுரு.சி., (2003) சங்க கால சமூகமும் இலக்கியமும் ஓர் மீள்பார்வை, கொழும்பு தமிழ்ச்சங்கம், கொழும்பு.
6. வித்தியானந்தன்.சு., (2003), தமிழர் சால்பு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

7. வேங்கடசாமி மயிலை சீனி, (2001), நுண்கலைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
8. சிவத்தம்பி. கா (2005), பண்டைய தமிழச் சமூகத்தில் நாடகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

REFERENCES

1. Puliyurkesikan, (2002), pari nilayam, Chennai
2. Sanga kavithai akkam marapum mattamum, (2006), Kumaran puththaka illam, Colombo
3. Kailasapathi .k, Kumaran puththaka illam, Colombo
4. Pathmanathan.s, Ilakkiyamum sanmukamum, hindu reliegus and cultureral affairs, Colomo
5. Sivaththampi (2005), Pandaith thamil samukaththil Nadakam, Kumaran puththaka illam, Colombo